# மார்கழிப் பாராயணத் தொகுப்பு



தெய்வத் தமிழ் அறக்கட்டளை வெளியீடு
12/1F, பதினோராவது தெரு, நியூ காலனி,
ஆதம்பக்கம், சென்னை - 600088

# மார்கழிப் பாராயணத் தொகுப்பு

திருப்புகழ் சிவம்; வேலூர் அன்பர்

**மு.பெருமாள்** அவர்கள்

திருவடிப் பேறு பெற்ற 20ம் ஆண்டு (05-01-2012)

வைகுண்ட ஏகாதசி அன்று வெளியிடப் பெற்றது


தெய்வத் தமிழ் அறக்கட்டளை வெளியீடு

12/F1, பதினோராவது தெரு, நியூகாலனி,

ஆதம்பக்கம், சென்னை -600088

உ
முருகா

# முன்னுரை

பாவை நோன்பு என்பது உலகின் மூத்த தமிழ்ப் பழங்குடி மக்களின் பண்பாட்டுச் சின்னமாக தொன்று தொட்டு வரும் அறிவார்ந்த வழிபாடாகும். இத்தகைய அரிய வழிபாட்டினை அகிலத்தை ஒருகாலத்தில் ஆண்ட ஆங்கிலேயரிடம் காண இயலாது. இன்று அகிலத்தை ஆளும் ஆதிக்க அண்ணன் எனப்படும் அமெரிக்கர்களிடம் காண முடியாது. ஏனைய பிரான்சு, உரோம், கிரேக்கம், அரேபியம், ஐரோப்ப நாடுகளிலும், ஆஸ்திரேலியாவிலும் தென்கிழக்கு நாடுகளிலும் என உலகின் வேறு எந்த மூலையிலும் காண முடியாது- சயாம் மற்றும் தாய்லாந்து தவிர.

அவ்வளவு ஏன் தமிழகம் தவிர இந்தியாவிலேயே ஏனைய பகுதிகளிலும் கடைப்பிடிக்கப் படுவதில்லை.

இது முழுக்க முழுக்க தமிழ்நாட்டினரின் தமிழ் பண்பட்டுச் சின்னமாகத் தொடர்ந்து வருவது தமிழரெல்லாம் பெருமைப் படத்தக்கது.

அப்போதெல்லாம் 12 வயதிலேயே சிறுமிகளுக்குத் திருமணம் நிகழ்ந்துவிடும். இந்தச் சிறுமியர்க்கெல்லாம் சிறந்த கணவன் அடைய வேண்டுமே என்று அச்சிறுமியர்க்கும் அவர்தம் பெற்றோருக்கும் கவலை இருப்பது இயல்புதானே!

பழைய தொன்மங்களில் உமையம்மை நோன்பிருந்து சிவபெருமானைக் கணவனாகப் பெற்றுக் கடிமணம் பெற்றாள் என்று கூறுவர். சிவபெருமானை விட வேறு சிறந்த கணவர் ஒருவர் கிடைப்பாரா? அந்தப் பரம்பொருள் போல இல்லை என்றாலும் பரம் பொருளுக்கு உகந்தவராக உலகம் போற்றும் குணநலன்கள் கூடியவராக ஒரு நல்ல கணவனாக அமைய வேண்டுமே! உமை நோன்பிருந்து நல்ல கணவனைப் பெறலாமே என்று உமையை வணங்கி நோற்பதே பாவை நோன்பு.

சிறுமியர் மார்கழி மாதத்தில் விடியற்காலை எழுந்து குழுக்குழுவாக முதிய பெண்டிர் வழிகாட்ட ஆற்றங்கரைக்குச் சென்று நீராடி ஆற்றங்கரையிலேயே மணலைக் குவித்து உமை அம்மையின் படிவத்தை இயற்றி அதற்கு வழிபாடியற்றி

பின்அப்படிவத்தை ஆற்றில் கரைத்து விடுவர். இது மார்கழி திருவாதிரையில் நிறைநிலா நிகழும் வரையில் நிதம் நடைபெறும்.

‘ஐந்தின் முதலா ஒன்பதின் காறும்

ஐங்கணைக் கிழவனை ஆர்வமொடு நோற்றலும்

பனிநீர் தோய்தலும் பாவை யாடலும்’

என்பன இது பற்றி கூறும் பிங்கலந்தை நிகண்டு வரிகள்

‘வெம்பாதாக வியனில வரைப்பென

அம்பா ஆடலின்ஆய்தொடிக் கன்னியர்’

என்பது பரிபாடலில் இது பற்றி வரும் வரிகள். தொல்காப்பியத்தியலும் இது பற்றிக் கூறப்படுகிறது.

இந்தப் பாவை நோன்பில் உள்ள மற்றொரு சிறப்பு என்ன என்றால் நோன்பு நோற்கும் சிறுமியர் நல்ல கணவன் மட்டுமின்றி நாடுவளம் பெற நல்ல மழை பொழியவும் வேண்டுவர். ஆக வீட்டுக்கு நல்ல கணவன்; நாட்டுக்கு நல்ல மழை என இரண்டு முக்கிய வரங்களை வேண்டி பாவை நோன்பு நோற்கப்படும்.

பெரும்பான்மையாக பெண்கள் நெறியல்லாத நெறிகளில் ஈடுபட அஞ்சுவர். எனவே அவர்களுக்கு இந்த இயல்பின் காரணமாக நல்லார் என்று ஒரு பெயருண்டு. எனவே நல்ல நல்லார் மனைவியாக அமைய வேண்டும் என நோற்கும் ஆடவர் நோன்பு ஏதும் இல்லை; நல்ல கணவனை வேண்டும் பாவை நோன்பு ஒன்றே உண்டு.

இந்தப் பாவை நோன்பை உலகியலிலிருந்து மாற்றி அருளியலுக்குப் பொருத்தி உயிராகிய தலைவி உயர்ந்த பரம்பொருளின் திருவடிகளைப் பெறுவதாக அமைத்து எழுந்த நூற்கள் தாம் பாவை நூல்கள்.

“மலஇருளுற்று உறங்காமல் மன்னுபரிபாகர்அருள்

செலமுழுக வருகவெனச் செப்பல் திருவெம்பாவை”

என்றும்,

“ஏர்மருவு பள்ளிஎழுச்சி பணிவிடை கேட்டு

ஆர்வமுடன் ஆண்ட அரற்கன்பு செயுமியல்பே"

என்றும் திருவெம்பாவை மற்றும் திருப்பள்ளியெழுச்சி ஆகியவற்றின் அருளியல் உள்ளுறையை முறையே அகத்தியர் என்ற பெயரினார் ஒருவர் மிகத் தெளிவாக எடுத்துரைத்து இருப்பது நினைவில் இருத்தத் தக்கது.

இவற்றில் மணிவாசகர் சிவபெருமானை எண்ணி எழுதிய திருவெம்பாவையே முதலதும் காலத்தால் மூத்ததும் ஆகும். அதைப் பின்பற்றி ஆண்டாள் 'மேலையார் செய்வனகள்' என்று போற்றி எடுத்து அரங்கப் பெருமானை நோற்றுப் பாடியது திருப்பாவை.

இந்தப் பாவை நூல்களின் சிறப்பு என்ன என்றால் மார்கழி மாதத்தில் இவை தவிர வேறு பாடுதல் மரபல்ல என்பதே. குறிப்பாக சிவனடியார்கள் மார்கழி மாதத்தில் திருவெம்பாவை தவிர வேறு திருமுறைப் பாடல்கள் பாராயணம் செய்வதில்லை; செய்தல் கூடாது என்பது மரபு. இதனைத் திருவெம்பாவைக் காப்பு என்று குறிப்பிடுவர்.

இந்த பாவை நூலைப் பாடிப் பரவுவது எப்படி என்று என்னுடைய தந்தையார் திருப்புகழ் சிவம் தெய்வத்திரு **மு.பெருமாள்** அவர்கள் மார்கழி பாராயணத் தொகுப்பு என்று வகுத்து ஒரு நூல் சுமார் *50* ஆண்டுகட்குமுன் வெளியிட்டார். அந்நூல் தற்போது கிடைப்பதில்லை.

எனவே, மீண்டும் ஆத்திக அண்பர்களுக்கு உதவ அந்த நூலை வெளியிட வேண்டும் என்ற ஆர்வம் எங்களுக்கு நெடுநாளாக இருந்து வந்தது. அதற்கு இப்பொழுது பொருத்தமான நேரம் இறைவன் திருவருளால் அமைந்துள்ளது.

என் தந்தையார் வைகுண்ட ஏகாதசியன்று முருகன் கழலடியில் *1991*-ஆம் ஆண்டில் இணைந்தார். அவர் பிறந்த நாளை ஒட்டி இவ்வாண்டு நூற்றாண்டாக அமைகிறது. எனவே அவர்தம் நூற்றாண்டை நினைவுறுத்தும் வகையில் இந்த ஆண்டு *05-01-2012* ஆம் நாள் வைகுண்ட ஏகாதசியில் இந்த மார்கழிப் பாராயண தொகுப்பு நூலை வெளியிடுவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம்.

இந்நூல் தொகுப்பு முறையில் கடைப்பிடிக்கப் பட்டுள்ள வைப்புமுறை வருமாறு:

1. பரமமுதற்காரணப் பொருளான சிவபெருமானை நோற்கும் திருவெம்பாவை முதலில்.

2. திருவெம்பாவை பாடிக் கொண்டே அடியார் திருக்கோயிலுக்குச் சென்று திருப்பள்ளியெழுச்சி பாடிப் பெருமானை எழுந்தருளச் செய்தல்.
3. பரம்பொருள் நிலையில் திருமாலுக்குத் திருப்பாவை பாடி அடியார் திரளல்.
4. அடியார்கள் திருமால் திருக்கோயிலுக்குச் சென்று திருப்பள்ளியெழுச்சிப் பாடி பெருமாளை எழுந்தருளச் செய்தல்.
5. பரம்பொருளான முருகப் பெருமானை பள்ளி எழுந்தருளச் செய்தல்
6. பரம்பொருளை அருட்பெருஞ்சோதியாகக் கண்டுவழிபடல். இறைவன் முதலில் நம்மைப் பள்ளியெழச் செய்தல்.
7. பின்னர் நாம் எழுந்திருந்து கோயில் கதவம் திறக்கப் பாடுதல்.
8. கோயில் திறந்தவுடன் அருட்பெருஞ்சோதியை எழுந்தருளச் செய்ய அருட்பெருஞ்சோதி பள்ளியெழுச்சி பாடிப் பரவுதல்.
9. இனி, நாடுவாழ பாரதமாதா பள்ளியெழுச்சிப் பாடிப் பரவுதல்.

இது என் தந்தையார் சிந்தையில் முகிழ்த்த வரன்முறைத்தொகுப்பு. இதனை அறிவார்ந்த முறையில் அன்பு துளும்ப மார்கழி மாதத்தில் பாராயணம் செய்பவர்கள் மனத்திற்கும் எட்டாத மாண்பு நலங்களைப் பெறுவது திண்ணம்.

மார்கழிநூல் பாரா யணத்தொகுப்பு மாண்பாக

ஆர்ந்த விடியலில் அன்புடனே- சேர்ந்துவந்து

பாடிப் பரவினால் பல்வளங்கள் பாரதனில்

நாடிவரும் நற்றமிழா ணை.

நாள்: 27.12.2011

இடம்: சென்னை

செந்தமிழ் வேள்விச் சதுரர்

**மு.பெ.சத்திய வேல் முருகன்**

எல்லாம் செயல் கூடும் என்னாணை அம்பலத்தே

எல்லாம் வலான் தனையே ஏத்து

## விநாயகர் துதி

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்

பெருவாக்கும் பீடும் பெருக்கும் – உருவாக்கும்

ஆதலால் வானோரும் ஆனை முகத்தானை

காதலால் கூப்புவர் தன்கை

## மாணிக்கவாசகர் துதி

தொல்லை இரும்பிறவி சூழும்தளை நீக்கி

அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்கியதே – எல்லை

மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்

திருவாசகம் என்னும் தேன்

# திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய் 1

பாசம் பரஞ்சோதிக்கு அன்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போது இப்போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீ!சீ! இவையும் சிலவோ விளையாடி
ஏசு மிடமீதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசும் மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச் சிற்றம்பலத்துள்
ஈசனார்க்கு அன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய் 2

முத்தன்ன வெண்நகையாய்  முன்வந்தெதிர் எழுந்தென்

அத்தன் ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்

தித்திக்கப் பேசுவாய் வந்துன்கடை திறவாய்

பத்துடையீர் ஈசன் பழவடியீர் பாங்குடையீர்

புத்தடியோம் புன்மைதீர்த்து ஆட்கொண்டாற் பொல்லாதோ

எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ

சித்தம் அழகியார் பாடாரோ நம் சிவனை

இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய் 3

ஒள்நித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ

வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ

எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்

கண்ணைத் துயின்றவமே காலத்தை போக்காதே

விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளை

கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்

உள்நெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்து

எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய் 4

மாலறியா நான்முகனும் காணா மலையினைநாம்

போலறிவோ மென்றுள்ள பொக்கங்க ளேபேசும்

பாலூறு தேன்வாய் படிறீ கடை திறவாய்

ஞாலமே விண்ணே  பிறவே அறிவரியான்

கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டும்

சீலமும் பாடிச் சிவனே சிவனே என்று

ஓலம் இடினும் உணராய் உணராய் காண்

ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய் 5

மானே! நீ நென்னலை நாளை வந்து உங்களை

நானே எழுப்புவன் என்றலும் நாணாமே

போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ

வானே நிலனே பிறவே அறிவரியான்

தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்

வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்

ஊனே உருகாய் உனக்கே உறும் எமக்கும்

ஏனோர்க்கும் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய் 6

அன்னே! இவையும் சிலவோ பல அமரர்

உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்

சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்

தென்னாஎன் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்

என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்

சொன்னோம்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ

வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்

என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய் 7

கோழி சிலம்பச் சிலம்பும் குருகெங்கும்

ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்

கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை

கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ

வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்

ஆழியான் அன்புடைமை யாமாறும் இவ்வாறோ

ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை

ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய் 8

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே

பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே

உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்

உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்

அன்னவரே எங்கணவர் ஆவார் அவருகந்து

சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்

இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்

என்ன குறையு மிலோமேலோர் எம்பாவாய் 9

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்

போதார்புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே

பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்

வேதமுதல் விண்ணோரும் மண்ணுந் துதித்தாலும்

ஓதஉலவா ஒருதோழன் தொண்ட ருளன்

கோதில் குலத்தரன்றன் கோயிற்பிணாப் பிள்ளைகாள்

ஏதவன்ஊர் ஏதவன்பேர்ஆருற்றார் ஆரயலார்

ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய் *10*

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்

கையால் குடைந்து குடைந்துன் கழல்பாடி

ஐயா வழியடியோம் வாழ்ந்தோம்காண் ஆரழல்போல்

செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்

மையார் தடங்கண் மடந்தை மணவாளா

ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்

உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்

எய்யாமல் காப்பாய் எமையேலோர் எம்பாவாய் *11*

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்

தீர்த்தன்நற் றில்லைச் சிற்றம்பலத்தே தீயாடும்

கூத்தன்இவ் வானும் குவலயமும் எல்லோமும்

காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி

வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்

ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்

பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்

ஏத்தி இருஞ்சுனைநீர் ஆடேலோர் எம்பாவாய் *12*

பைங்குவளை கார்மலரால் செங்கமலப் பைம்போதால்

அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்

தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்

எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த

பொங்கு மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்துநம்

சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்

கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்

பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய் *13*

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்

கோதை குழலாட வண்டின் குழாமாடச்

சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி

வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்

சோதித் திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதித் திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய் *14*

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத்
தான்பணியாள்
பேரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய் *15*

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு

முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய் *16*

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும்எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளும் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய் 17

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேஇப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய் *18*

உன்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்று

அங்கப் பழஞ்சொல் புதுக்கும்எம் அச்சத்தால்

எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போம் கேள்

எம்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க

எங்கை உனக்கல்லா தெப்பணியும் செய்யற்க

கங்குல் பகலெங்கண் மற்றொன்றும் காணற்க

இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்

எங்கெழிலென் ஞாயிறு எமக்கேலோர் எம்பாவாய். *19*

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்

போற்றி அருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்

போற்றிஎல் லாஉயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்

போற்றிஎல் லாஉயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்

போற்றிஎல் லாஉயிர்க்கும் ஈறாம் இணையடிகள்

போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்

போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்

போற்றியாம் மார்கழிநீ ராடேலோர் எம்பாவாய். *20*

--ஜஜஜ--ஜஜஜ--

# திருப்பள்ளியெழுச்சி

போற்றியென் வாழ்முத லாகிய பொருளே!

புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்டு

ஏற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்

எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்

சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்

திருப்பெருந் துறையுறை சிவபெருமானே!

ஏற்றுயர் கொடியுடை யாய்எனை யுடையாய்

எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே! *1*

அருணன்இந் திரன்திசை அணுகினன் இருள்போய்

அகன்றது உதயம்நின் மலர்த்திரு முகத்தின்

கருணையின் சூரியன் எழஎழ நயனக்

கடிமலர் மலரமற் றண்ணலங் கண்ணாம்

திரள்நிறை அறுபதம் முரல்வன இவையோர்

திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே

அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே

அலைகட லேபள்ளி எழுந்தரு ளாயே! *2*

கூவின பூங்குயில் கூவின கோழி

குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்

ஓவின தாரகை யொளிஒளி உதயத்து

ஒருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்

தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்

திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே

யாவரும் அறிவரி யாயெமக் கெளியாய்

எம்பெரு மான் பள்ளி எழுந்தரு ளாயே 3

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்

இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்

துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்

தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்

சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்

திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே

என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்

எம்பெரு மான் பள்ளி எழுந்தரு ளாயே 4

பூதங்கள் தோறும்நின் றாயெனின் அல்லால்

போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்

கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்

கேட்டறி யோமுனைக் கண்டறி வாரைச்

சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா

சிந்தனைக் கும்அரியாய் எங்கள் முன்வந்து

ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்

எம்பெரு மான் பள்ளி எழுந்தரு ளாயே 5

பப்பற வீட்டிருந் துணரும்நின் அடியார்

பந்தனை வந்தறுத் தார்அவர் பலரும்

மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்

வணங்குகின் றார்அணங் கின்மண வாளா

செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்

திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே

இப்பிறப் பறுத்தெம்மை ஆண்டருள் புரியும்

எம்பெரு மான் பள்ளி எழுந்தரு ளாயே 6

அதுபழச் சுவையென அமுதென அறிதற்கு

அரிதென எளிதென அமரரும் அறியார்

இதுஅவன் திருவுரு இவன்அவன் எனவே

எங்களை ஆண்டுகொண் டிங்கெழுந் தருளும்

மதுவளர் பொழில்திரு உத்தர கோச

மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா

எதுஎமைப் பணிகொளும் ஆறது கேட்போம்

எம்பெரு மான் பள்ளி எழுந்தரு ளாயே 7

முந்திய முதல்நடு இறுதியும் ஆனாய்

மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்

பந்தணை விரலியும் நீயும்நின் னடியார்

பழங்குடில் தொறும்எழுந் தருளிய பரனே

செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்

திருப்பெருந் துறையுறை கோயிலுங் காட்டி

அந்தண னாவதும் காட்டிவந் தாண்டாய்

ஆரமுதே பள்ளி எழுந்தரு ளாயே 8

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா

விழுப்பொரு ளேஉன தொழுப்படி யோங்கள்

மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே

வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்

கண்ணகத் தேநின்று களிதரு தேனே

கடலமு தேகரும் பேவிரும் படியார்

எண்ணகத் தாய்உல குக்குயி ரானாய்

எம்பெரு மான் பள்ளி எழுந்தரு ளாயே 9

புவனியிற் போய்ப்பிற வாமையின் நாள்நாம்

போக்குகின் றோம்அவ மேஇந்தப் பூமி

சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்

திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்

அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்

படவும்நின் னலர்ந்தமெய்க் கருணையும் நீயும்

அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்

ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே! *10*

## ஆண்டாள் துதி

அன்ன வயல்புதுவை ஆண்டாள் அரங்கற்கு

பன்னு திருப்பாவை பல்பதியம் - இன்னிசையால்

பாடிக் கொடுத்தாள் நற்பாமாலை பூமாலை

சூடிக் கொடுத்தாளைச் சொல்லு

# திருப்பாவை

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்;

நீராடப் போதுவீர்! போதுமினோ, நேரிழையீர்!

சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்!

கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்,

ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்,

கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்

நாராயணனே, நமக்கே பறைதருவான்,

பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய். 1

வையத்து வாழ்வீர்காள்! நாமும் நம்பாவைக்குச்

செய்யுங் கிரிசைகள் கேளீரோ! பாற்கடலுள்

பையத் துயின்ற பரமன் அடிபாடி,

நெய்யுண்ணோம்; பாலுண்ணோம்; நாட்காலே நீராடி

மையிட் டெழுதோம்; மலரிட்டு நாம் முடியோம்;

செய்யா தனசெய்யோம்; தீக்குறளைச் சென்றோதோம்;

ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி

உய்யுமா றெண்ணி உகந்தேலோ ரெம்பாவாய். 2

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி

நாங்கள் நம் பாவைக்குச் சாற்றிநீர் ஆடினால்,

தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரிபெய்து

ஓங்கு பெருஞ்செந்நெ லூடு கயல் உகளப்

பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப,

தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி

வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்

நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய். 3

ஆழி மழைக்கண்ணா! ஒன்று நீ கைகரவேல்

ஆழியுள் புக்கு முகந்துகொ டார்த்தேறி,

ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கறுத்து

பாழியந் தோளுடைப் பற்பநா பன்கையில்

ஆழிபோல் மின்னி, வலம்புரிபோல் நின்றதிர்ந்து,

தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்

வாழ உலகினில் பெய்திடாய், நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். 4

மாயனை மன்னு வடமதுரை மைந்தனை,
தூய பெருநீர் யமுனைத் துறைவனை,
ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கை,
தாயைக் குடல்விளக்கம் செய்த தாமோதரனை,
தூயோம்ஆய் வந்துநாம் தூமலர் தூவித்தொழுது
வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கப்
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசுஆகும் செப்பேலோ ரெம்பாவாய். 5

புள்ளும் சிலம்பினகாண்; புள்ளரையன் கோயிலில்
வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ?
பிள்ளாய்! எழுந்திராய், பேய்முலை நஞ்சுண்டு,
கள்ளச் சகடம் கலக்கழியக் காலோச்சி,
வெள்ளத்தரவில் துயிலமர்ந்த வித்தினை,
உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்
மெள்ள எழுந்து அரியென்ற பேரரவம்
உள்ளம்புகுந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய். 6

கீசுகீ சென்றெங்கும் ஆனைச்சாத் தன்கலந்து

பேசின பேச்சரவம் கேட்டிலையோ? பேய்ப்பெண்ணே!

காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து

வாச நறுங்குழல் ஆய்ச்சியர் மத்தினால்

ஓசை படுத்தத் தயிரரவம் கேட்டிலையோ?

நாயகப் பெண்பிள்ளாய்! நாராயணன் மூர்த்தி

கேசவனைப் பாடவும்நீ கேட்டே கிடத்தியோ?

தேசமுடையாய்! திறவேலோ ரெம்பாவாய். 7

கீழ்வானம் வெள்ளென்று, எருமை சிறுவீடு

மேய்வான் பரந்தனகாண்; மிக்குள்ள பிள்ளைகளும்

போவான் போகின்றாரைப் போகாமல் காத்துன்னைக்

கூவுவான் வந்து நின்றோம், கோதுகலமுடைய

பாவாய்! எழுந்திராய்; பாடிப் பறைகொண்டு

மாவாய் பிளந்தானை, மல்லரை மாட்டிய

தேவாதி தேவனைச் சென்றுநாம் சேவித்தால்

ஆவாவென் றாராய்ந் தருளேலோ ரெம்பாவாய். 8

தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரிய,

தூமங் கமழத் துயிலணைமேல் கண்வளரும்

மாமான் மகளே! மணிக்கதவம் தாள்திறவாய்;

மாமீர்! அவளை எழுப்பீரோ? உம்மகள்தான்

ஊமையோ? அன்றிச் செவிடோ அனந்தலோ?

ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ?

மாமாயன், மாதவன், வைகுந்தன் என்றென்று

நாமம் பலவும் நவின்றேலோ ரெம்பாவாய். 9

நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்!

மாற்றமும் தாராரோ வாசல் திறவாதார்?

நாற்றத் துழாய்முடி நாரா யணன்நம்மால்

போற்றப் பறைதரும் புண்ணியனால் பண்டொருநாள்

கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்ப கரணனும்

தோற்றம் உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ?

ஆற்ற அனந்தல் உடையாய்! அருங்கலமே!

தேற்றமாய் வந்து திறவேலா ரெம்பாவாய். 10

கற்றுக் கறவைக் கணங்கள் பலகறந்து,

செற்றார் திறலழியச் சென்று செருச்செய்யும்

குற்றமொன் றில்லாத கோவலர்தம் பொற்கொடியே!

புற்றர வல்குல் புனமயிலே! போதராய்,

சுற்றத்துத் தோழிமார் எல்லாரும் வந்துநின்

முற்றம் புகுந்து முகில்வண்ணன் பேர்பாட,
சிற்றாதே பேசாதே செல்வப்பெண் டாட்டிநீ
எற்றுக் குறங்கும் பொருளேலோ ரெம்பாவாய். 11

கனைத்திளங் கற்றெருமை கன்றுக் கிரங்கி
நினைத்து முலைவழியே நின்றுபால் சோர
நனைத்தில்லம் சேறாக்கும் நற்செல்வன் தங்காய்!
பனித்தலை வீழநின் வாசல் கடைபற்றிச்
சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற
மனத்துக் கினியானைப் பாடவும்நீ வாய்திறவாய்!
இனித்தான் எழுந்திராய்; ஈதென்ன பேருறக்கம்?
அனைத்தில்லத் தாரும் அறிந்தேலோ ரெம்பாவாய். 12

புள்ளின்வாய் கீண்டானை, பொல்லா அரக்கனைக்
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப்போய்,
பிள்ளைகள் எல்லாரும் பாவைக் களம்புக்கார்;
வெள்ளி எழுந்து, வியாழம் உறங்கிற்று;
புள்ளும் சிலம்பினகாண்; போதரிக் கண்ணினாய்!
குள்ளக் குளிரக் குடைந்து நீராடாதே,
பள்ளிக் கிடத்தியோ? பாவாய்! நீ நன்னாளால்

கள்ளம் தவிர்ந்து கலந்தேலோ ரெம்பாவாய். 13

உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர் வாய்நெகிழ்ந்து ஆம்பல்வாய் கூம்பின காண்;
செங்கல் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்,
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போகின்றார்;
எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்
நங்காய்! எழுந்திராய், நாணாதாய்! நாவுடையாய்!
சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்
பங்கயக் கண்ணானைப் பாடேலோ ரெம்பாவாய். 14

எல்லே இளங்கிளியே! இன்னம் உறங்குதியோ?
சில்லென் றழையேன்மின், நங்கைமீர்! போதர்கின்றேன்;
'வல்லை, உன் கட்டுரைகள்! பண்டேஉன் வாயறிதும்!'
'வல்லீர்கள் நீங்களே, நானேதான் ஆயிடுக!'
'ஒல்லைநீ போதாய், உனக்கென்ன வேறுடையை?'
'எல்லோரும் போந்தாரோ?' 'போந்தார், போந்து
எண்ணிக்கொள்'
வல்லானை கொன்றானை, மாற்றாரை மாற்றழிக்க
வல்லானை, மாயனைப் பாடேலோ ரெம்பாவாய் 15

நாயக னாய்நின்ற நந்தகோபனுடைய

கோயில்காப் பானே! கொடித்தோன்றும் தோரண

வாயில்காப் பானே! மணிக்கதவம் தாள்திறவாய்;

ஆயர்சிறுமிய ரோமுக்கு அறைபறை

மாயன் மணிவண்ணன் நென்னலே வாய்நேர்ந்தான்;

தூயோமாய் வந்தோம் துயிலெழப் பாடுவான்;

வாயால் முன்னமுன்னம் மாற்றாதே அம்மா! நீ

நேய நிலைக்கதவம் நீக்கேலோ ரெம்பாவாய். *16*

அம்பரமே, தண்ணீரே, சோறே அறஞ்செய்யும்

எம்பெருமான்! நந்தகோ பாலா! எழுந்திராய்;

கொம்பனார்க் கெல்லாம் கொழுந்தே! குலவிளக்கே!

எம்பெரு மாட்டி! யசோதாய்! அறிவுறாய்;

அம்பரம் ஊடறுத் தோங்கி உலகளந்த

உம்பர்கோ மானே! உறங்காது எழுந்திராய்;

செம்பொற் கழலடிச் செல்வா! பலதேவா!

உம்பியும் நீயும் உறங்கேலோ ரெம்பாவாய். *17*

உந்து மதகளிற்றன் ஓடாத தோள்வலியன்,

நந்தகோ பாலன் மருமகளே! நப்பின்னாய்!

கந்தம் கமழும் குழலீ! கடைதிறவாய்;

வந்தெங்கும் கோழி அழைத்தனகாண்; மாதவிப்

பந்தல்மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண்;

பந்தார் விரலி! உன் மைத்துனன் பேர்பாட,

செந்தா மரைக்கையால் சீரார் வளையொலிப்ப

வந்து திறவாய், மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். *18*

குத்து விளக்கெரியக் கோட்டுக்கால் கட்டில்மேல்

மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறிக்

கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்

வைத்துக் கிடந்த மலர்மார்பா! வாய்திறவாய்;

மைத்தடங் கண்ணினாய்! நீ உன் மணாளனை

எத்தனை போதும் துயிலெழ ஒட்டாய்காண்,

எத்தனை யேலும் பிரிவாற்ற கில்லாயால்,

தத்துவம் அன்று தகவேலோ ரெம்பாவாய் *19*

முப்பத்து மூவர் அமரர்க்கு முன்சென்று

கப்பம் தவிர்க்கும் கலியே! துயிலெழாய்;

செப்பம் உடையாய்! திறலுடையாய்! செற்றார்க்கு

வெப்பம் கொடுக்கும் விமலா! துயிலெழாய்;

செப்பன்ன மென்முலை செவ்வாய் சிறுமருங்குல்

நப்பின்னை நங்காய்! திருவே! துயிலெழாய்;
உக்கமும் தட்டொளியும் தந்துஉன் மணாளனை
இப்போதே எம்மை நீராட்டேலோ ரெம்பாவாய். 20

ஏற்றகலங்கள் எதிர்பொங்கி மீதளிப்ப
மாற்றாதே பால்சொரியும் வள்ளல் பெரும்பசுக்கள்
ஆற்றப் படைத்தான் மகனே! அறிவுறாய்;
ஊற்றமுடையாய்! பெரியாய்! உலகினில்
தோற்றமாய் நின்ற சுடரே! துயிலெழாய்;
மாற்றார் உனக்கு வலிதொலைந்து உன்வாசற்கண்
ஆற்றாதுவந்து உன்னடிபணியு மாபோலே,
போற்றியாம் வந்தோம் புகழ்ந்தேலோ ரெம்பாவாய். 21

அங்கண் மாஞாலத் தரசர் அபிமான
பங்கமாய் வந்துநின் பள்ளிக்கட் டிற்கீழே
சங்கமிருப் பார்போல் வந்துதலைப் பெய்தோம்;
கிங்கிணி வாய்ச் செய்த தாமரைப் பூப்போலே,
செங்கண் சிறுச்சிறிதே எம்மேல் விழியாவோ?
திங்களும் ஆதித்தியனும் எழுந்தாற் போல்,
அங்கணி ரண்டும் கொண்டு எங்கள்மேல் நோக்குதியேல்
எங்கள்மேல் சாபம் இழிந்தேலோ ரெம்பாவாய். 22

மாரிமலை முழைஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும்

சீரியசிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து,

வேரிமயிர் பொங்க எப்பாடும் பேர்ந்துதறி,

மூரிநிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்,

போதருமா போலேநீ பூவைப்பூவண்ணா! உன்

கோயில்நின்றும் இங்ஙனே போந்தருளிக் கோப்புடைய

சீரியசிங் காசனத்திருந்து யாம்வந்த

காரியம் ஆராய்ந் தருளேலோ ரெம்பாவாய். 23

அன்று இவ்வுலகம் அளந்தாய்! அடிபோற்றி,

சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய்! திறல்போற்றி,

பொன்றச் சகடம் உதைத்தாய்! புகழ்போற்றி,

கன்று குணிலா எறிந்தாய்! கழல்போற்றி,

குன்று குடையா எடுத்தாய்! குணம்போற்றி,

வென்று பகைகெடுக்கும் நின்கையில் வேல்போற்றி,

என்றென்று உன்சேவகமே ஏத்திப் பறைகொள்வான்

இன்றுயாம் வந்தோம், இரங்கேலோ ரெம்பாவாய். 24

ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவில்

ஒருத்தி மகனாய் ஒளித்து வளர,

தரிக்கிலா னாகித் தான் தீங்கு நினைந்த

கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்

நெருப்பென்ன நின்ற நெடுமாலே! உன்னை

அருத்தித்து வந்தோம்; பறைதருதி யாகில்

திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம்பாடி

வருத்தமுந் தீர்ந்து மகிழ்ந்தேலோ ரெம்பாவாய் *25*

மாலே! மணிவண்ணா! மார்கழிநீ ராடுவான்

மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்

ஞாலத்தை யெல்லாம் நடுங்குமுரல்வன

பாலன்ன வண்ணத்துள் பாஞ்சசன்னியமே

போல்வன சங்கங்கள் போய்ப்பாடுடையனவே,

சாலப்பெரும் பறையே, பல்லாண் டிசைப்பாரே,

கோல விளக்கே, கொடியே, விதானமே,

ஆலின் இலையாய்! அருளேலோ ரெம்பாவாய். *26*

கூடாரை வெல்லுஞ்சீர்க் கோவிந்தா! உன்தன்னை

பாடிப் பறைகொண்டு யாம்பெறும் சம்மானம்;

நாடு புகழும் பரிசினால் நன்றாக,

சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே

பாடகமே யென்றனைய பல்கலனும் யாம் அணிவோம்;

ஆடை உடுப்போம்; அதன்பின்னே பாற்சோறு(*)

மூடநெய் பெய்து முழங்கை வழிவார

கூடியிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய். 27

கறவைகள் பின்சென்று கானம் சேர்ந்துண்போம்;

அறிவொன்று மில்லாத ஆய்க்குலத்து உன்தன்மைப்

பிறவிப் பெறுந்தனைப் புண்ணியம் யாம் உடையோம்;

குறைவொன்று மில்லாத கோவிந்தா! உன்தன்னோடு

உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது!

அறியாத பிள்ளைகளோம் அன்பினால் உன்தன்னைச்

சிறுபேர ழைத்தனவும் சீறி யருளாதே,

இறைவா, நீ தாராய் பறையேலோ ரெம்பாவாய். 28

சிற்றம் சிறுகாலே வந்துன்னைச் சேவித்துன்

பொற்றா மரையடியே போற்றும் பொருள் கேளாய்;

பெற்றம் மேய்த்துண்ணும் குலத்திற் பிறந்து நீ

குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது;

இற்றைப் பறைகொள்வான் அன்று காண் கோவிந்தா!

எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு

உற்றோமே ஆவோம்; உனக்கே நா மாட்செய்வோம்;

மற்றைநம் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய். *29*

வங்கக் கடல்கடைந்த மாதவனைக் கேசவனைத்

திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி

அங்கப் பறைகொண்ட ஆற்றை, அணி புதுவைப்

பைங்கமலத் தண்தெரியல் பட்டர்பிரான் கோதை சொன்ன

சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே

இங்கிப் பரிசுரைப்பார், ஈரிரண்டு மால்வரைத்தோள்

செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்

எங்கும் திருவருள்பெற் றின்புறுவ ரெம்பாவாய். *30*

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத் தாண்டு

பலகோடி நூறாயிரம்

மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா உன்

சேவடி செவ்வித்திருக் காப்பு

### தொண்டரடிப் பொடியாழ்வார் அருளிச் செய்த

# திருப்பள்ளியெழுச்சி

கதிரவன் குணதிசைச் சிகரம்வந் தணைந்தான்

கனவிரு ளகன்றது காலையும் பொழுதாய்

மதுவிரிந் தொழுகின மாமல ரெல்லாம்

வானவ ரரசர்கள் வந்துவந் தீண்டி

எதிர்திசை நிறைந்தன ரிவரொடும் புகுந்த

இருங்களிற் றீட்டமும் பிடியொடு முரசும்

அதிர்தலி லலைகடல் போன்றுள தெங்கும்

அரங்கத்தம் மா!பள்ளி யெழுந்தரு ளாயே! 1

கொழுங்கொடி முல்லையின் கொழுமல ரணவிக்

கூர்ந்தது குணதிசை மாருத மிதுவோ

எழுந்தன மலரணைப் பள்ளிகொள் ளன்னம்

ஈன்பனி நனைந்தத மிருஞ்சிற குதறி

விழுங்கிய முதலையின் பிலம்புரை பேழ்வாய்

வெள்ளெயி  றுறவதன் விடத்தினுக் கனுங்கி

அழுங்கிய ஆனையி னருந்துயர் கெடுத்த

அரங்கத்தம் மா!பள்ளி யெழுந்தரு ளாயே! 2

சுடரொளி பரந்தன சூழ்திசை யெல்லாம்

துன்னிய தாரகை மின்னொளி சுருங்கி

படரொளி பசுத்தனன் பனிமதி யிவனோ

பாயிரு ளகன்றது பைம்பொழில் கமுகின்

மடலிடைக் கீறைவண் பாளைகள் நாற

வைகறை கூர்ந்தது மாருத மிதுவோ

அடலொளி திகழ்தரு திகிரியந் தடக்கை

அரங்கத்தம் மா!பள்ளி யெழுந்தரு ளாயே! 3

மேட்டிள மேதிகள் தளைவிடு மாயர்கள்

வேய்ங்குழ லோசையும் விடைமணிக் குரலும்

ஈட்டிய இசைதிசை பரந்தன வயலுள்

இரிந்தன சுரும்பினம் இலங்கையர் குலத்தை

வாட்டிய வரிசிலை வானவ ரேறே

மாமுனி வேள்வியைக் காத்து அவபிரதம்

ஆட்டிய அடுதிறல் அயோத்தியெம் மரசே!

அரங்கத்தம் மா!பள்ளி யெழுந்தரு ளாயே! 4

புலம்பின புட்களும் பூம்பொழில் களின்வாய்

போயிற்றுக் கங்குல் புகுந்தது புலரி

கலந்தது குணதிசை கனைகட லரவம்

களிவண்டு மிழற்றிய கலம்பகம் புனைந்த
அலங்கலந் தொடையல்கொண் டடியிணை பணிவான்
அமரர்கள் புகுந்தன ராதலி லம்மா
இலங்கையர் கோன்வழி பாடுசெய் கோயில்
எம்பெருமான் பள்ளி யெழுந்தரு ளாயே! 5

இரவியர் மணிநெடுந் தேரொடு மிவரோ?
இறையவர் பதினொரு விடையரு மிவரோ?
மருவிய மயிலின னறுமுக னிவனோ?
மருதரும் வசுக்களும் வந்துவந் தீண்டி
புரவியோ டாடலும் பாடலும் தேரும்
குமரதண் டம்புகுந் தீண்டிய வெள்ளம்
அருவரை யனையநின் கோயில்முன் னிவரோ?
அரங்கத்தம் மா!பள்ளி யெழுந்தரு ளாயே! 6

அந்தரத் தமரர்கள் கூட்டங்க ளிவையோ?
அருந்தவ முனிவரும் மருதரு மிவரோ?
இந்திர னானையும் தானுவந் திவனோ?
எம்பெரு மானுன் கோயிலின் வாசல்
சுந்தரர் நெருக்கவிச் சாதரர் நூக்க
இயக்கரும் மயங்கினர் திருவடி தொழுவான்

அந்தரம் பாரிட மில்லைமற்  றிதுவோ

அரங்கத்தம் மா!பள்ளி யெழுந்தரு ளாயே! 7

வம்பவிழ் வானவர் வாயுறை வழங்க

மாநிதி கபிலையொண் கண்ணாடி முதலா

எம்பெரு மான்படி மக்கலம் காண்டற்கு

ஏற்பன வாயின கொண்டுநன் முனிவர்

தும்புரு நாரதர் புகுந்தன ரிவரோ?

தோன்றின னிரவியும் துலங்கொளி பரப்பி

அம்பர தலத்தில்நின் றகல்கின்ற திருள்போய்

அரங்கத்தம் மா!பள்ளி யெழுந்தரு ளாயே! 8

ஏதமில் தண்ணுமை யெக்கமத் தளிய

யாழ்குழல் முழவமோ டிசைதிசை கெழுமி

கீதங்கள் பாடினர் கின்னரர் கருடர்கள்

கந்தரு வரவர் கங்குலு மெல்லாம்

மாதவர் வானவர் சாரண ரியக்கர்

சித்தரும் மயங்கினர் திருவடி தொழுவான்

ஆதலி லவர்க்குநா ளோலக்க மருள

அரங்கத்தம் மா!பள்ளி யெழுந்தரு ளாயே! 9

கடிமலர்க் கமலங்கள் மலர்ந்தன இவையோ?

கதிரவன் கனைகடல் முளைத்தனன் இவனோ?

துடியிடை யார்சுரி குழல்பிழிந் துதறித்

துகிலுடுத் தேறினர் சூழ்புன லரங்கா

தொடையொத்த துளவமும் கூடையும் பொலிந்து

தோன்றிய தோள்தொண்ட ரடிப்பொடி யென்னும்

அடியனை அளியனென் றருளியுன் னடியார்க்

காட்படுத் தாய்பள்ளி யெழுந்தரு ளாயே! *10*

ஸ்ரீமத் சிதம்பர சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய

# திருப்போரூர் திருமுருகன் திருப்பள்ளியெழுச்சி

## ஸ்ரீமத் சிதம்பர சுவாமிகள் துதி

திருப்போரூர் தெய்வம் திருவேல் இறைக்கு
விருப்போடு சந்நிதி நூல் சாத்தி – கருப்பைக்
கதவதனைச் சாத்தும் கதிசொல் குருவே
சிதம்பரனே செந்தாள் சரண்

மாணிக்க வாசகர்போல் மின்னொளியாய் யாவர்முனே
ஆணிப்பொன் போரூரன் ஆறுமுகன் – தாணிழலில்
ஒன்றி உயர்ந்த சிதம்பர தேவேநீ
அன்றி எனக்கார் புகல்

- மு.பெ.சத்தியவேல் முருகனார்

திருமலி குணதிசை அருணன்நல் உதயஞ்

செய்தனன் இருவினை சமமல பாகம்

பருவம துடையவர் தமதுள மெனவே

பாரகம் விளங்கின அவர்குணக் கிரிமேல்

அருளொளி வீசிநின் றிலகுமுன் பதம்போல்

அருக்கனுங் குணதிசைப் பொருப்பெழு கின்றான்

இருளறு குறுமுனி பரவிய போரூர்

இறையவ னேபள்ளி யெழுந்தரு ளாயே 1

ஆடுறு மணிமயில் சிறைவிரித் ததன்மேல்

அருளொளி திகழநீ யெழுந்தருள் முறைபோல்

பீடுறு மரகதக் குரகதம் பூண்ட

பெருந்தடந் தேர்மிசை எழுந்தனன் கதிரோன்

வாடுறு தாமரை நினதரு ளடைந்த

மாதவர் முகமென மலர்ந்தன எங்கும்

ஏடவிழ் மலர்ப்பொழில் பொதுளிய போரூர்

இறையவ னேபள்ளி யெழுந்தரு ளாயே 2

பகரரு சுடர்விடும் உனதயில் கண்ட

பதகர்தம் மனமெனச் சுரர்மனம் எனவே

புகருடு மழுங்கின விகசித மாகிப்

பொலிந்தன முளரிகள் தடந்தொறும் உனது
திகழ்பதம் அடைந்தவர் உயிர்ச்சிறு போதம்
தேய்ந்தன மதியொளி தேய்ந்தது குணபால்
இகலறு கதிரெழு கின்றது போரூர்
இறையவ னேபள்ளி யெழுந்தரு ளாயே 3

என்றனைக் கைப்பிடித் தாளுறும் இறைவன்
எழில்பெறு மலர்விழி மலர்ந்தெழு சமயம்
உன்றன துளஇருள் போக்குவன் நோக்கால்
ஒல்லையில் வருகென எல்லினைக் கூவி
நின்றன திருங்கொடி அழைத்துறு முறைபோல்
நீடுறு மனைதொறும் கூவின மிகவும்
இன்றெனை யாண்டுகொண் டருளிய போரூர்
இறையவ னேபள்ளி யெழுந்தரு ளாயே 4

மன்மதன் விருதுகள் ஊதின பொழில்வாய்
மாயவன் கரப்படை தொனித்ததுன் எதிரே
தென்மலி மலரவன் ஊர்திகள் தடத்துச்
சிலம்பின நின்கொடி பதஎச் சரிக்கை
பன்முறை பண்ணுவ போல்மனை தோறும்
பாழியங் குரலொலி காட்டின அருளால்

என்மல இருள்தெறும் ஆரிய போரூர்

இறையவ னேபள்ளி யெழுந்தரு ளாயே 5

கின்னரர் கிம்புரு டர்களொடு கருடர்

கெந்தரு வர்கள்சித்தர் வித்தியா தரரும்

மன்னிய முரசதிர் சிகரியின் வாய்தல்

வந்தனர் ஐந்தெழில் வாத்தியந் தொனித்தார்

பொன்னில மடவார் இந்நில மடவார்

புரிந்தனர் நாடகம் இருந்தகை மயில்போல்

இன்னருள் பொழிமுகி லேதிருப் போரூர்

இறையவ னேபள்ளி யெழுந்தரு ளாயே 6

வானவர் புகழ்நவ வீரர்கள் ஒருபால்

மால்வரை யனகண நாதர்கள் ஒருபால்

தீனமில் எண்டிசைப் பாலகர் ஒருபால்

தேவர்கள் முனிவர்கள் பாதலர் ஒருபால்

தானம துதவிய கரங்கொடு பாரி

சாதநன் மலர்மழை பொழிந்தனர் பணிந்தே

ஏனலம் புனமலி சாரலம் போரூர்

இறையவ னேபள்ளி யெழுந்தரு ளாயே 7

மறைமுடி உணர்ந்தவர் மறையவர் அடியார்

வருபரி சாலகர் அரசர்கள் வணிகர்

குறைவறு வளவர்கள் மற்றுள ரெவரும்

குழுமியே வடமொழி தென்மொழி பாவால்

நிறைதய வுடன்நினைப் புகழ்ந்துநின் றேத்தி

நீளுறு தண்டெனப் பணிந்தெழு கின்றார்

எறிமணி அருவிகள் சொரிகிரிப் போரூர்

இறையவ னேபள்ளி யெழுந்தரு ளாயே 8

விலையறு நவமணி மாலைகள் கொணர்ந்தார்

வெயில்விடு குலிசகே யூரங்கள் கொணர்ந்தார்

அலகறு மணிசெறி மகுடங்கள் கொணர்ந்தார்

ஆழிம தாணிகள் நூபுரம் கொணர்ந்தார்

நிலைபெறு கவரிதழ் நேத்திரங் கொணர்ந்தார்

நிறைந்துளம் வேண்டிய பெறவுறப் பணிந்தார்

எலையறு பெருவரம் அருள்செயப் போரூர்

இறையவ னேபள்ளி யெழுந்தரு ளாயே 9

ஐங்கரம் கொடுதழு வுறநினை ஒருகொம்பு

ஆனையுள் மகிழ்ந்தது முக்கணம் பொருப்புன்

பங்கய முகஅணி கண்டுகண் களிப்பப்

பரிவொடு நினைந்தது பனிவரை உயிர்த்த

செங்கயல் விழிப்பசும் பிடிநினை மடிமேல்

சேர்த்தருட் பால்தர திருவுளத் துனும்ஈண்

டெங்களை யாண்டுகொண் டருளிய போரூர்

இறையவ னேபள்ளி யெழுந்தரு ளாயே

போரூரன் பள்ளி யெழுச்சிதினம் ஓதினால்

காரூரும் காலன் அணுகானே — ஏரூரும்

எந்தையாம் கந்தவேள் ஏறும் மயில்சூழ்ந்து

விந்தையாய் ஈயும் வரம்

- மு.பெ.சத்தியவேல் முருகன்

அருட்பெருஞ் சோதி அருட்பெருஞ் சோதி

தனிப்பெருங்கருணை அருட்பெருஞ் சோதி

# திருஅருட்பிரகாச வள்ளலார் அருளிய

# திருஅருட்பா

## மெய் இன்பப் பேறு

சத்தியம் சத்தியம் அருட்பெருஞ் சோதித்

தந்தைய ரேஎனைத் தாங்குகின் றீரே

உத்தமம் ஆகும்நுந் திருச்சமு கத்தென்

உடல்பொருள் ஆவியை உவப்புடன் அளித்தேன்

இத்தகை உலகிடை அவைக்கும்என் றனக்கும்

ஏதுஞ் சுதந்திரம் இல்லைஇங் கினிநீர்

எத்தகை ஆயினும் செய்துகொள் கிற்பீர்

எனைப்பள்ளி எழுப்பிமெய் இன்பந்தந் தீரே 1

ஆணைநும் ஆணைஎன் அருட்பெருஞ் சோதி

ஆண்டவ ரேதிரு அம்பலத் தவரே

நாணைவிட் டுரைக்கின்ற வாறிது கண்டீர்

நாயக ரேஉமை நான்விட மாட்டேன்

கோணைஎன் உடல்பொருள் ஆவியும் நுமக்கே

கொடுத்தனன் இனிஎன்மேல் குறைசொல்ல வேண்டாம்

ஏணைநின் றெடுத்தகைப் பிள்ளைநான் அன்றோ

எனைப்பள்ளி எழுப்பிமெய் இன்பந்தந் தீரே 2

அகத்தொன்று புறத்தொன்று நினைத்ததிங் கில்லை

அருட்பெருஞ் சோதிஎன் ஆண்டவ ரேநீர்

சகத்தென்றும் எங்கணும் சாட்சியாய் நின்றீர்

தனிப்பெருந் தேவரீர் திருச்சமு கத்தே

உகத்தென துடல்பொருள் ஆவியை நுமக்கே

ஒருமையின் அளித்தனன் இருமையும் பெற்றேன்

இகத்தன்றிப் பரத்தினும் எனக்கோர்பற் றிலைகாண்

எனைப்பள்ளி எழுப்பிமெய் இன்பந்தந் தீரே 3

தப்படி எடுத்துக்கொண் டுலகவர் போலே

சாற்றிட மாட்டேன்நான் சத்தியம் சொன்னேன்

செப்படி வித்தைசெய் சித்தர்என் றோதும்

தேவரீர் வல்லபத் திருச்சமு கத்தே

இப்படி வான்முதல் எங்கணும் அறிய

என்னுடல் ஆதியை ஈந்தனன் உமக்கே

எப்படி ஆயினும் செய்துகொள் கிற்பீர்

எனைப்பள்ளி எழுப்பிமெய் இன்பந்தந் தீரே 4

தருணத்துக் கேற்றவா சொல்லிப்பின் மாற்றும்

தப்புரை ஈதன்று சத்தியம் சொன்னேன்

கருணைப் பெருக்கினில் கலந்தென துள்ளே

கனவினும் நனவினும் களிப்பருள் கின்றீர்

வருணப் பொதுவிலும் மாகமு கத்தென்

வண்பொரு ளாதியை நண்பொடு கொடுத்தேன்

இருள்நச் சறுத்தமு தந்தர வல்லீர்

எனைப்பள்ளி எழுப்பிமெய் இன்பந்தந் தீரே 5

வாய்மட்டில் சொல்கின்ற வார்த்தைஅன் றிதுஎன்

மனம்ஒத்துச் சொல்லிய வாய்மைமுக் காலும்

தாய்மட்டில் அன்றிஎன் தந்தையும் குருவும்

சாமியும் ஆகிய தனிப்பெருந் தகையீர்

ஆய்மட்டில் என்னுடல் ஆதியை நுமக்கே

அன்புடன் கொடுத்தனன் ஆண்டவ ரேநீர்

ஏய்மட்டில் எப்படி யேனுஞ்செய் கிற்பீர்

எனைப்பள்ளி எழுப்பிமெய் இன்பந்தந் தீரே 6

தித்திக்கப் பேசிக் கசப்புள்ளே காட்டும்

திருட்டுப்பேச் சன்றுநும் திருவுளம் அறியும்

எத்திக்கும் அறியஎன் உடல்பொருள் ஆவி

என்பவை மூன்றும்உள் அன்பொடு கொடுத்தேன்

சித்திக்கு மூலத்தைத் தெளிவித்தென் உள்ளே

திருநடம் செய்கின்ற தேவரீர் தாமே

இத்திக்கில் எப்படி யேனுஞ்செய் கிற்பீர்

எனைப்பள்ளி எழுப்பிமெய் இன்பந்தந் தீரே 7

புன்மார்க்கத் துள்ளும் புறத்தும் வேறாகிப்

புகன்றசொல் அன்றுநும் பொன்னடி கண்ட

சன்மார்க்க சங்கத்துச் சாதுக்கள் காணச்

சத்தியம் சத்தியம் சத்தியம் சொன்னேன்

தன்மார்க்கத் தென்னுடல் ஆதியை நுமக்கே

தந்தனன் திருவருட் சந்நிதி முன்னே

என்மார்க்கத் தெப்படி யேனுஞ்செய் கிற்பீர்

எனைப்பள்ளி எழுப்பிமெய் இன்பந்தந் தீரே 8

இச்சைவே றில்லைஇங் கென்கருத் தெல்லாம்

என்னுள் அமர்ந்தறிந் தேஇருக் கின்றீர்

விச்சை எலாம்வல்ல நுந்திருச் சமுக

விண்ணப்பம் என்னுடல் ஆதியை நுமக்கே
நிச்சலும் தந்தனன் என்வசம் இன்றி
நின்றனன் என்றனை நீர்செய்வ தெல்லாம்
எச்செயல் ஆயினும் செய்துகொள் கிற்பீர்
எனைப்பள்ளி எழுப்பிமெய் இன்பந்தந் தீரே *9*

மன்செய்து கொண்டசன் மார்க்கத்தில் இங்கே
வான்செய்து கொண்டது நான்செய்து கொண்டேன்
முன்செய்து கொண்டதும் இங்ஙனங் கண்டீர்
மூவகை யாம்உடல் ஆதியை நுமது
பொன்செய்து கொண்ட பொதுவினில் ஆடும்
பொன்னடி காணப் பொருந்திக் கொடுத்தேன்
என்செய்து கொண்டாலும் செய்துகொள் கிற்பீர்
எனைப்பள்ளி எழுப்பிமெய் இன்பந்தந் தீரே *10*

தெய்வங்கள் பலபல சிந்தைசெய் வாரும்
சேர்கதி பலபல செப்புகின் றாரும்
பொய்வந்த கலைபல புகன்றிடு வாரும்
பொய்ச்சம யாதியை மெச்சுகின் றாரும்
மெய்வந்த திருவருள் விளக்கம்ஒன் றில்லார்
மேல்விளை வறிகிலர் வீண்கழிக் கின்றார்

எய்வந்த துன்பொழித் தவர்க்கறி வருள்வீர்

எனைப்பள்ளி எழுப்பிமெய் இன்பந்தந் தீரே *11*

--ஜஜஜ--ஞஞஞ--

# திருக்கதவந் திறத்தல்

திருக்கதவம் திறவாயோ திரைகளெலாம் தவிர்த்தே
திருவருளாம் பெருஞ்சோதித் திருஉருக்காட் டாயோ
உருக்கிஅமு தூற்றெடுத்தென் உடம்புயிரோ டுளமும்
ஒளிமயமே ஆக்குறமெய் உணர்ச்சிஅரு ளாயோ
கருக்கருதாத் தனிவடிவோய் நின்னைஎன்னுட் கலந்தே
கங்குல்பகல் இன்றிஎன்றும் களித்திடச்செய் யாயோ
செருக்கருதா தவர்க்கருளும் சித்திபுரத் தரசே
சித்தசிகா மணியேஎன் திருநடநா யகனே 1

மணிக்கதவம் திறவாயோ மறைப்பையெலாம் தவிர்த்தே
மாற்றறியாப் பொன்னேநின் வடிவதுகாட் டாயோ
கணிக்கறியாப் பெருநிலையில் என்னொடுநீ கலந்தே
கரைகடந்த பெரும்போகம் கண்டிடச்செய் யாயோ
தணிக்கறியாக் காதல்மிகப் பெருகுகின்ற தரசே
தாங்கமுடி யாதினிஎன் தனித்தலைமைப் பதியே
திணிக்கலையா தியஎல்லாம் பணிக்கவல்ல சிவமே
சித்தசிகா மணியேஎன் திருநடநா யகனே 2

உரைகடந்த திருவருட்பே ரொளிவடிவைக் கலந்தே
உவட்டாத பெரும்போகம் ஓங்கியுறும் பொருட்டே

இரைகடந்தென் உள்ளகத்தே எழுந்துபொங்கித் ததும்பி
என்காதல் பெருவெள்ளம் என்னைமுற்றும் விழுங்கிக்
கரைகடந்து போனதினித் தாங்கமுடி யாது
கண்டுகொள்வாய் நீயேஎன் கருத்தின்வண்ணம் அரசே
திரைகடந்த குருமணியே சிவஞான மணியே
சித்தசிகா மணியேஎன் திருநடநா யகனே 3

உன்புடைநான் பிறர்போலே உடுக்கவிழைந் தேனோ
உண்ணவிழைந் தேனோவே றுடைமைவிழைந் தேனோ
அன்புடையாய் என்றனைநீ அணைந்திடவே விழைந்தேன்
அந்தோஎன் ஆசைவெள்ளம் அணைகடந்த தரசே
என்புடைவந் தணைகஎன இயம்புகின்றேன் உலகோர்
என்சொலினும் சொல்லுகஎன் இலச்சைஎலாம் ஒழிந்தேன்
தென்புடையோர் முகநோக்கித் திருப்பொதுநிற் கின்றோய்
சித்தசிகா மணியேஎன் திருநடநா யகனே 4

இறந்திறந்தே இளைத்ததெலாம் போதும்இந்த உடம்பே
இயற்கைஉடம் பாகஅருள் இன்னமுதம் அளித்தென்
புறந்தழுவி அகம்புணர்ந்தே கலந்துகொண்டெந் நாளும்
பூரணமாம் சிவபோகம் பொங்கியிட விழைந்தேன்
பிறந்திறந்து போய்க்கதியைப் பெறநினைத்தே மாந்த

பேதையர்போல் எனைநினையேல் பெரியதிருக் கதவம்
திறந்தருளி அணைந்திடுவாய் சிற்சபைவாழ் அரசே
சித்தசிகா மணியேஎன் திருநடநா யகனே 5

பொய்யுடையார் விழைகின்ற புணர்ச்சிவிழைந் தேனோ
பூணவிழைந் தேனோவான் காணவிழைந் தேனோ
மெய்யுடையாய் என்னொடுநீ விளையாட விழைந்தேன்
விளையாட்டென் பதுஞானம் விளையும்விளை யாட்டே
பையுடைப்பாம் பனையரொடும் ஆடுகின்றோய் எனது
பண்பறிந்தே நண்புவைத்த பண்புடையோய் இன்னே
செய்யுடைஎன் னொடுகூடி ஆடஎழுந் தருள்வாய்
சித்தசிகா மணியேஎன் திருநடநா யகனே 6

கூறுகின்ற சமயம்எலாம் மதங்கள்எலாம் பிடித்துக்
கூவுகின்றார் பலன்ஒன்றும் கொண்டறியார் வீணே
நீறுகின்றார் மண்ணாகி நாறுகின்றார் அவர்போல்
நீடுலகில் அழிந்துவிட நினைத்தேனோ நிலைமேல்
ஏறுகின்ற திறம்விழைந்தேன் ஏற்றுவித்தாய் ஆங்கே
இலங்குதிருக் கதவுதிறந் தின்னமுதம் அளித்தே
தேறுகின்ற மெய்ஞ்ஞான சித்திஉறப் புரிவாய்
சித்தசிகா மணியேஎன் திருநடநா யகனே 7

வேதநெறி ஆகமத்தின் நெறிபவுரா ணங்கள்

விளம்புநெறி இதிகாசம் விதித்தநெறி முழுதும்

ஓதுகின்ற சூதனைத்தும் உளவனைத்தும் காட்டி

உள்ளதனை உள்ளபடி உணரஉரைத் தனையே

ஏதமற உணர்ந்தனன்வீண் போதுகழிப் பதற்கோர்

எள்ளளவும் எண்ணம்இலேன் என்னொடுநீ புணர்ந்தே

தீதறவே அனைத்தும்வல்ல சித்தாடல் புரிவாய்

சித்தசிகா மணியேஎன் திருநடநா யகனே 8

கலையுரைத்த கற்பனையே நிலைஎனக்கொண் டாடும்

கண்மூடி வழக்கம்எலாம் மண்மூடிப் போக

மலைவறுசன் மார்க்கம்ஒன்றே நிலைபெறமெய் உலகம்

வாழ்ந்தோங்கக் கருதியருள் வழங்கினைஎன் தனக்கே

உலைவறும்இப் பொழுதேநல் தருணம்என நீயே

உணர்த்தினைவந் தணைந்தருள்வாய் உண்மைஉரைத் தவனே

சிலைநிகர்வன் மனங்கரைத்துத் திருவமுதம் அளித்தோய்

சித்தசிகா மணியேஎன் திருநடநா யகனே 9

திருத்தகும்ஓர் தருணம்இதில் திருக்கதவம் திறந்தே

திருவருட்பே ரொளிகாட்டித் திருவமுதம் ஊட்டிக்

கருத்துமகிழ்ந் தென்உடம்பில் கலந்துளத்தில் கலந்து

கனிந்துயிரில் கலந்தறிவிற் கலந்துலகம் அனைத்தும்

உருத்தகவே அடங்குகின்ற ஊழிதொறும் பிரியா

தொன்றாகிக் காலவரை உரைப்பஎலாம் கடந்தே

திருத்தியொடு விளங்கிஅருள் ஆடல்செய வேண்டும்

சித்தசிகா மணியேஎன் திருநடநா யகனே *10*

## இராமலிங்க வள்ளலார் அருளிய

# திருப்பள்ளி எழுச்சி

பொழுது விடிந்ததென் உள்ளமென் கமலம்

பூத்தது பொன்னொளி பொங்கிய தெங்கும்

தொழுதுநிற் கின்றனன் செய்பணி எல்லாம்

சொல்லுதல் வேண்டும்என் வல்லசற் குருவே

முழுதும்ஆ னான்என ஆகம வேத

முறைகளெ லாம்மொழி கின்றமுன் னவனே

எழுதுதற்(கு) அரியசீர் அருட்பெருஞ் சோதி

என்தந்தை யேபள்ளி எழுந்தருள் வாயே *1*

துற்குண மாயைபோய்த் தொலைந்தது ஞானம்

தோன்றிடப் பொன்னொளி தோற்றிய கதிர்தான்

சிற்குண வரைமிசை உதயஞ்செய் ததுமா

சித்திகள் அடிப்பணி செய்திடச் சூழ்ந்த

நற்குணச் சன்மார்க்க சங்கத்தார் எல்லாம்

நண்ணினர் தோத்திரம் பண்ணிநிற் கின்றார்

எற்குண வளித்தஎன் அருட்பெருஞ் சோதி

என்னம்மை யேபள்ளி எழுந்தருள் வாயே *2*

நிலந்தெளிந் ததுகண மழுங்கின சுவண

நீடொளி தோன்றிற்றுக் கோடொலிக் கின்ற

அலர்ந்தது தாமரை ஆணவ இருள்போய்

அழிந்தது கழிந்தது மாயைமால் இரவு

புலர்ந்தது தொண்டரோ டண்டரும் கூடிப்

போற்றியோ சிவசிவ போற்றிஎன் கின்றார்

இலங்குரு வளித்தஎன் அருட்பெருஞ் சோதி

என்குரு வேபள்ளி எழுந்தரு ளாயே 3

கல்லாய மனங்களும் கரையப்பொன் னொளிதான்

கண்டது கங்குலும் விண்டது தொண்டர்

பல்லாரும் எய்தினர் பாடிநின் றாடிப்

பரவுகின் றார்அன்பு விரவுகின் றாராய்

நல்லார்மெய்ஞ் ஞானிகள் யோகிகள் பிறரும்

நண்ணினர் சூழ்ந்தனர் புண்ணிய நிதியே

எல்லாஞ்செய் வல்லஎன் அருட்பெருஞ் சோதி

என்தெய்வ மேபள்ளி எழுந்தருள் வாயே 4

புன்மாலை இரவெலாம் புலர்ந்தது ஞானப்

பொருப்பின்மேல் பொற்கதிர் பொலிந்தது புலவோர்

சொன்மாலை தொடுத்தனர் துதித்துநிற் கின்றார்

சுத்தசன் மார்க்கசங் கத்தவர் எல்லாம்
மன்மாலை மாலையா வந்துசூழ் கின்றார்
வானவர் நெருங்கினர் வாழிஎன் கின்றார்
என்மாலை அணிந்தஎன் அருட்பெருஞ் சோதி
என்பதி யேபள்ளி எழுந்தருள் வாயே 5

ஒருமையின் உலகெலாம் ஓங்குக எனவே
ஊதின சின்னங்கள் ஊதின சங்கம்
பெருமைகொள் சமரச சுத்தசன் மார்க்கப்
பெரும்புகழ் பேசினர் பெரியவர் சூழ்ந்தார்
அருமையும் எளிமையும் ஆகிஅன் றாகி
அம்பலத் தேசித்தி ஆடல்செய் பதியே
இருமையும் அளித்தஎன் அருட்பெருஞ் சோதி
என்அர சேபள்ளி எழுந்தருள் வாயே 6

சினைப்பள்ளித் தாமங்கள் கொணர்ந்தனர் அடியார்
சிவசிவ போற்றிஎன் றுவகைகொள் கின்றார்
நினைப்பள்ளி உண்ணத்தெள் ளாரமு தளிக்கும்
நேரம்இந் நேரம்என் றாரியர் புகன்றார்
முனைப்பள்ளி பயிற்றாதென் தனைக்கல்வி பயிற்றி
முழுதுணர் வித்துடல் பழுதெலாம் தவிர்த்தே

எனைப்பள்ளி எழுப்பிய அருட்பெருஞ் சோதி

என்னப்ப னேபள்ளி எழுந்தருள் வாயே 7

மதம்பிடித் தவர்எல்லாம் வாய்ப்பிடிப் புண்டு

வந்துநிற் கின்றனர் வாய்திறப் பிப்பான்

கதம்பிடித் தவர்எல்லாம் கடும்பிணி யாலே

கலங்கினர் சூழ்ந்தனர் உலம்புறு கின்றார்

பதம்பிடித் தவர்எல்லாம் அம்பலப் பாட்டே

பாடினர் ஆடினர் பரவிநிற் கின்றார்

இதம்பிடித் தெனையாண்ட அருட்பெருஞ் சோதி

என்அய்ய னேபள்ளி எழுந்தருள் வாயே 8

மருளொடு மாயைபோய்த் தொலைந்தது மதங்கள்

வாய்மூடிக் கொண்டன மலர்ந்தது கமலம்

அருள்ஒளி விளங்கிய தொருதிருச் சபையும்

அலங்கரிக் கின்றனர் துலங்கிவீற் றிருக்கத்

தெருளொடு பொருளும்மேன் மேல்எனக் களித்துச்

சித்தெலாஞ் செய்திடத் திருவருள் புரிந்தே

இருள்அறுத் தெனையாண்ட அருட்பெருஞ் சோதி

என்வள்ள லேபள்ளி எழுந்தருள் வாயே 9

அலங்கரிக் கின்றோம்ஓர் திருச்சபை அதிலே

அமர்ந்தருட் சோதிகொண் டடிச்சிறி யோமை

வலம்பெறும் இறவாத வாழ்வில்வைத் திடவே

வாழ்த்துகின் றோம்முன்னர் வணங்கிநிற் கின்றோம்

விலங்கிய திருள்எலாம் விடிந்தது பொழுது

விரைந்தெமக் கருளுதல் வேண்டும்இத் தருணம்

இலங்குநல் தருணம்எம் அருட்பெருஞ் சோதி

எம்தந்தை யேபள்ளி எழுந்தருள் வாயே *10*

### பாரதியார் பாடிய

# பாரதமாதா திருப்பள்ளி எழுச்சி

பொழுது புலர்ந்தது யாம்செய்த தவத்தால்
புன்மை யிருட்கணம் போயின யாவும்
எழுபசும் பொற்சுடர் எங்கணும் பரவி
யெழுந்து விளங்கிய தறிவெனும் இரவி
தொழுதுனை வாழ்த்தி வணங்குதற் கிங்குன்
தொண்டர்பல் லாயிரர் சூழ்ந்துநிற் கின்றோம்
விழிதுயில் கின்றனை யின்னுமெந் தாயே
வியப்பிது காண்!பள்ளி யெழுந்தரு ளாயே! 1

புள்ளினம் ஆர்த்தன ஆர்த்தன முரசம்
பொங்கிய தெங்குஞ் சுதந்திர நாதம்
வெள்ளிய சங்கம் முழங்கின கேளாய்
வீதியெ லாமணு குற்றனர் மாதர்
தெள்ளிய அந்தணர் வேதமும் நின்றன்
சீர்திரு நாமமும் ஓதிநிற் கின்றார்
அள்ளிய தெள்ளமு தன்னையெம் அன்னை
ஆருயிரே பள்ளி யெழுந்தரு ளாயே! 2

பருதியின் பேரொளி வானிடைக் கண்டோம்

பார்மிசை நின்னொளி காணுதற் கலந்தோம்

கருதிநின் சேவடி அணிவதற் கென்றே

கனிவுறு நெஞ்சக மலர்கொடு வந்தோம்

சுருதிகள் பயந்தனை சாத்திரங் கோடி

சொல்லரு மாண்பின ஈன்றனை யம்மே

நிருதர்கள் நடுக்குறச் சூல்கரத் தேற்றாய்

நிர்மலை யே!பள்ளி யெழுந்தரு ளாயே! 3

நின்னெழில் விழியருள் காண்பதற் கெங்கள்

நெஞ்சகத் தாவலை நீயறி யாயோ

பொன்னனை யாய்!வெண் பனிமுடி யிமயப்

பொருப்பின னீந்த பெருந்தவப் பொருளே!

என்ன தவங்கள்செய் தெத்தனை காலம்

ஏங்குவம் நின்னருட் கேழையம் யாமே

இன்னமும் துயிலுதி யேலிது நன்றோ?

இன்னுயி ரே!பள்ளி யெழுந்தரு ளாயே! 4

மதலைய ரெழுப்பவுந் தாய்துயில் வாயோ?

மாநிலம் பெற்றவ ளிஃதுண ராயோ?

குதலை மொழிக்கிரங் காதொரு தாயோ?

கோமக ளே!பெரும் பாரதர்க் கரசே!

விதமுறு நின்மொழி பதினெட்டுங் கூறி

வேண்டிய வாறுனைப் பாடுதுங் காணாய்

இதமுற வந்தெமை யாண்டருள் செய்வாய்

ஈன்றவ ளே!பள்ளி யெழுந்தரு ளாயே! *5*

# ஆசிரியரின் பிற நூல்கள்

1. பிள்ளையார் போற்றி நானூறு
2. கணபதி போற்றி 108
3. கனகாம்பிகை உடனாய கைலாயநாதர் போற்றித்திரட்டு
4. தட்சிணா மூர்த்தி போற்றி 108
5. அம்பிகை போற்றி ஐங்குறு நூறு
6. கொற்றவை போற்றி 108
7. முத்தமிழ் முருகன் போற்றி 308
8. வேல் போற்றி 108
9. வள்ளியம்மை போற்றி 108
10. சேக்கிழார் போற்றி 108
11. மெய்கண்ட சிவம் போற்றி 108
12. அருள் நந்தி சிவம் போற்றி 108
13. மறைஞான சிவம் போற்றி 108
14. உமாபதி சிவம் போற்றி 108
15. வள்ளலார் போற்றி 108
16. பாம்பன் சுவாமிகள் போற்றி 108
17. ஐயப்பன் போற்றி 108
18. அனுமன் போற்றி 108
19. நவகிரகங்கள் போற்றித்திரட்டு
20. மூவொன்பான் விண்மீன்கள் போற்றித்திரட்டு (அச்சில்)
21. வாரியார் சுவாமிகள் வரலாற்றுப் போற்றி நானூறு
22. வாரியார் சுவாமிகள் துதித்தமிழ் மாலை
23. பன்னிரு திருமுறை போற்றி வழிபாடு
24. திருமுறை போற்றி 108
25. தமிழ் மறை சைவ அனுட்டானம்
26. தமிழ்வேள்வி
27. செந்தமிழாகம குடநீராட்டு நன்னூல்
28. வண்டமிழில் வாழ்வியல் சடங்குகள்
29. வண்டமிழில் வாழ்வியல் சடங்குகள் (ஆங்கிலத்தில்)
30. திருவருட் பிரகாச வள்ளலார் அறநெறியும் அமைப்புகளும்

31. சிவவேள்விப் பாடற்றிரட்டு
32. திருவடிப் பேறு.
33. திருமந்திரச் சிந்தனை (மலேசிய சொற்பொழிவுத் தொகுப்பு)
34. பிரதோஷ வழிபாடு – உள்ளுறை (மலேசிய சொற்பொழிவுத் தொகுப்பு)
35. தௌத்தியம்
36. காசிமடமே கலக்கமேன்–1
37. காசிமடமே கலக்கமேன்–2
38. ஊழும் உயர்குறள் மூன்றும்
39. சரவணப் பெருமான் சரணத்துதி
40. திருவள்ளுவர் மும்மணிக் கோவை
41. கருவறு அறிவுக் கோவை
42. கருவுற்பத்தி (திருமந்திர உரை)
43. திருமந்திரம் – ஓர் அறிமுகம் (பாயிரம்)
44. திருமுருகாற்றுப்படை ஓவியவுரை
45. திருமுருகாற்றுப்படை ஓவியவுரை (ஆங்கிலத்தில்) (அச்சில்)
46. இவரே சைவர் இனிதே காண்க !
47. திருவாசக மகுடம் – பாவமா ? (மறுப்பு நூல்)
48. கோயில்களில் களைகட்டும் கடவுட்டமிழ்
49. தமிழ்விடு தூது
50. சண்முக கவசம் – அனுபவப் பேருரை
51. பேரூர் நெறி – பழிப்பும் பதிலுரையும்
52. விநாயகர் அகவல் – சித்தாந்தச் சிறப்புரை
53. கோளறு பதிகம் – விரிவுரை
54. திருமுறைத் தமிழ்த் திருமண கையேடு
55. நம்பிரான் திருமூலர் நற்றமிழ் நாடகம்
56. திருமந்திர மூன்றாம் தந்திர சாரம் (யோக நூல்)
57. தாலியும் தமிழரும்
58. தொல்காப்பியத்தில் மெய்யியல்
59. திருஞான சம்பந்தர் அவதார நோக்கங்கள்
60. திருக்கோயில்களில் நாள்வழிபாடு

61. செந்தமிழில் சிவாகம பூசை செய்வது எப்படி ?
62. அருந்தமிழில் எழுத்துக்கள் 51 (அச்சில்)
63. சர்வஞானோத்தரத் தமிழாகமம்
64. Khadhar Story
65. தமிழ் நாட்காட்டி
66. Panchaangam (Mauritius)
67. குருபூசைச் சிறப்பு

**எஸ்.ஆர்.எம். பல்கலைக் கழக அருட்சுனைஞர் பயிற்சி நூற்கள்:**

68. தமிழக சமய வரலாறு
69. தமிழாகமமும் கோயிற் கலையும்
70. தமிழ் மந்திரங்களும் மறை ஒழுகலாறும்
71. சிவதீக்கையும் தீக்கை வகைகளும்
72. சைவசித்தாந்தம். ஓர் அறிமுகம்
73. கடவுள் மங்கலம் (குட முழுக்கு)
74. வாழ்வியல் சடங்குகள்
75. கோயில் நாட்பூசை முறைகள்]
76. மொரீசியஸ் பண்டிகைகள் வழிபடு முறை (MTTF)
77. சைவப் பண்டிகைகள் வழிபடு முறை (அச்சில்)
78. மார்கழி பாராயணத் தொகுப்பு நூல்
79. சேக்கிழார் பிள்ளைத்தமிழ் நயவுரை

**(பாரத் பல்கலைகழக அருட்சுனைஞர் பயிற்சி நூற்கள்):**

80. [வைணவத் திருக்கோயில் வழிபாட்டுமுறை
81. வைணவத் திருக்கோயில் திருத்தனி (சம்ப்ரோக்ஷணம்)
82. வைணவ விசிட்டாத்துவிதம் (விளக்கம்)]
83. அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் – உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு விளக்கக் கையேடு நூல் (தமிழ் மற்றும் ஆங்கிலத்தில்)
84. கந்த சஷ்டி பாராயணம் தொகுப்பு
85. போற்றி நூற்றிரட்டு (அச்சில்)
86. சத்தியவேல் முருகனார் – சத்தியவேல் முருகன் ஆர்? [சீடர்களின் தொகுப்பு]
87. Kandhar Anubhoothi - An Exegesis (English)
88. நவகோள்கள் மற்றும் நட்சத்திர வழிபாடு (அச்சில்)

**பண்டிகைகள் – தமிழ் வழிபாடு திரட்டு நூற்கள் வரிசை:**

89. பொங்கல் வழிபாடு

90. விநாயக சதுர்த்தி வழிபாடு

91. நவராத்திரி வழிபாடு

92. புரட்டாசி சனிக்கிழமை வழிபாடு

93. தீபாவளி வழிபாடு

94. கௌரி நோன்பு வழிபாடு

95. கார்த்திகை தீப வழிபாடு

96. ஆடல் வல்லான் ஆதிரை வழிபாடு

97. தமிழ் புத்தாண்டு வழிபாடு

98. சிவராத்திரி (அச்சில்)

99. கந்தன் கவினறுமை (கந்தசஷ்டி) (அச்சில்)

100. தமிழரின் வேதம் எது? ஆகமம் எது?

101. அறத்தமிழ் வேதம்

102. பொருட்டமிழ் வேதம்

103. திருமுறைத் தமிழிசையின் தொன்மையும் சிறப்பும் வரலாறும்

104. தமிழ்த்தாய் போற்றி 108

**ஆசிரியரின் குறுந்தகடுகள் :**

1. சித்தாந்தச் சிந்தனைத் தேன் (திராவிட மாபாடியம் என்னும் சிவஞான பாடியம் முழுதும்)
2. கன்னல் தமிழில் கழுவாய் வழிபாடு (பிரதோஷம்)
3. பட்டினத்தார்
4. அளவை இலக்கணம் (தர்க்க சாத்திரம்)
5. ஆந்திர திராவிடப் பல்கலைக் கழக சொற்பொழிவு
6. பாம்பன் சுவாமிகள் வரலாறும் பெருமைகளும்

## இணைவோம் இணையதளங்களில்

செந்தமிழர் தெய்வமறை நாவர்செழு நற்கலைதெ ரிந்தவவரோ
டந்தமில்கு ணத்தவர்க ளர்ச்சனைகள் செய்யவமர் கின்றவரனூர்
கொந்தலர்பொ ழிற்பழன வேலிகுளிர் தண்புனல்வ ளம்பெருகவே
வெந்திறல்வி ளங்கிவளர் வேதியர்வி ரும்புபதி வீழிநகரே.

– சம்பந்தர்

## இதோ தமிழ் அர்ச்சகர்!

தமிழ்வேத, தமிழ் ஆகம நெறிகளை உள்ளடக்கிய தொன்மை
நெறிகளுடன் உரிய பண்டைத் தமிழ் மந்திரங்களுடன்
தமிழ் அர்ச்சகரை இங்கே நாம் காணலாம்;
அழைத்துப் பயன் பெறலாம்.

**www.archakar.com**

## இதோ தமிழ்வேத தாண்டவம்!

தமிழ்வேதம் தொடர்பான ஆழ்ந்த அறிவுடன் ஆதாரமான செய்திகள்
நம்முடைய மூல வேதவேர்கள் உலகிற்கு காட்டப்படுகின்றன.

**www.vedham.in**

பிற இணையதளங்கள்

**www.dheivamurasu.org**

**www.dheivathamizh.org**

மின்னஞ்சல் : **editor@dheivathamizh.org**

✦✦✦✦✦



# தெய்வமுரசு நற்றமிழ் நாட்காட்டியின் சிறப்புகள்

- எண்ணிலும் எழுத்திலும் எல்லாக் கோணத்திலும் தூய தமிழ்ப்பெயர்கள் அமைந்த நாட்காட்டி.
- தமிழில் எண்களின் வரிவடிவம் உண்டா என்று அறியாத தமிழினத் தலைமுறைக்கு அவற்றை அறிமுகப்படுத்தல்.
- சாலிவாகன சகாப்தத்திற்கு வழியனுப்பி விடை தந்து திருவள்ளுவர் ஆண்டினை ஏந்தி எடுத்தல்.
- 60 தமிழ் ஆண்டுகளின் பெயர்களையும் வடமொழி பெயர்களுக்கு பதிலாக பொருள் பொதிந்த புத்தம் புது தமிழ் இணைப் பெயர்கள் – வெம்முகம் (துன்முகி), பொற்றடை (ஏவிளம்பி)

- மதியால் பெயர் பெற்ற மாதங்களின் பெயரைத் தூய தமிழால் வழங்குதல்.
- அமாவாசை – பௌர்ணமி, ஏகாதசி, சுக்லபட்சம்-கிருஷ்ணபட்சம் எல்லாம் நமக்கு ஏன்? மறைமதி-நிறைமதி, பதிற்றொருமை, வளர்பிறை-தேய்பிறை என அவற்றின் தூய தமிழ் வடிவங்கள்.
- பண்டிகைகள், விழாக்களைத் தமிழ்ப் பெயர்களால் வழக்கில் உலவவிடல்.
- முகூர்த்தம்-நல்முழுத்தம் என தூய தமிழால் வழங்கப் பெறல்.
- நாயன்மார்கள், மற்றும் தமிழ்ச் சான்றோர்கள் சிறந்த நாட்களின் குறிப்புகள் தமிழில்.
- பிறைநாள் (திதி), நாண்மீன் (நட்சத்திரம்), ஓகம் (யோகம்), நல்முழுத்தம் (முகூர்த்தம்), கழுவாய் வழிபாடு (பிரதோஷம்), மறைமதி (அமாவாசை), நிறைமதி (பௌர்ணமி) என்று அமைக்கப் பெற்றது.
- **மொத்தத்தில் எண்ணிலும், எழுத்திலும், எதிலும் தமிழ் மணம்!**
- திருமந்திர மாநாட்டில் 2-1-09 அன்று திருவாவடுதுறை ஆதீனம் தவத்திரு முத்துகுமாரசாமி தம்பிரான் சுவாமிகள் தெய்வமுரசு நாட்காட்டி வெளியீட்டிற்கு நல்வாழ்த்து வழங்கினார்.
- **நல் இளம் தலைமுறை நற்றமிழ் எண் அறிய நாட்டுக இந்நாட்காட்டி வீட்டின் வரவேற்பறையில்.**

தெய்வமுரசு நற்றமிழ் நாட்காட்டியின் விலை: ரூ.40. தபால் செலவு தனி

email : editor@dheivamurasu.org www.dheivamurasu.org